1995 ஏப்ரல் 24] [திரு. சு. முத்துசாமி]

அறிக்கை

கீரனூர் அரசு மருத்துவமனையில் தற்பொழுது குளிர்சாதனப் பெட்டி வசதி இல்லை. இம்மருத்துவமனைக்கு தேவையான ஒரு குளிர்சாதனப் பெட்டி 1995-96 நிதியாண்டில் வாங்கித் தரப்படும்.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை, புரட்சித் தலைவி அவர்களுடைய இரும்புக் கோட்டை, எப்போதும் புரட்சித் தலைவியின் பக்கம்தான் புதுக்கோட்டை மாவட்ட மக்கள் இருக்கிறார்கள் என்பதை நிரூபித்து வரும் வகையில், புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கு இரண்டு முறை நலத்திட்டங்களை வழங்கிய புரட்சித் தலைவியின் நல்லாட்சியில், எனது குளத்தூர் தொகுதியிலுள்ள கீரனூர் அரசு மருத்துவமனைக்கு, 1995-96 ஆம் நிதி ஆண்டில், குளிர்சாதனப் பெட்டி வாங்கித் தரப்படும் என்று கூறியதற்கு என் சார்பிலும், என் தொகுதி மக்களின் சார்பிலும், மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அந்த மருத்துவமனைக்கு எக்ஸ்ரே கருவி ஒன்றை வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்சாதனப் பெட்டியைப் பொறுத்தவரையில் உண்டான கவன ஈர்ப்பு இது. எக்ஸ்ரேயைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு புதிதாக 20 மருத்துவமனைகளுக்காக இந்த நிதி ஆண்டில் பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், இந்த மருத்துவமனைக்கு வருமா என்று என்னால் இப்போது உத்தரவாதமாகச் சொல்ல முடியாது. எனவே, இதைப்பற்றி ஆய்வு செய்யப்படும்.

(ஆ) கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் பகுதிகளில் இரவில் மின் விநியோகம் தடைப்படுதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. இராமசுவாமி அவர்கள், அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார், திரு. சி. இராமசுவாமி.

**திரு. சி. இராமசுவாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் பகுதிகளில் கடந்த 10 நாட்களாக இரவில் மின் விநியோகம் தடைபட்டு பொது மக்கள் அவதிப்படுவது குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[திரு. எஸ். கண்ணப்பன்] [1995 ஏப்ரல் 24

அறிக்கை

கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் முதலிய பகுதிகளுக்கு சின்னசேலம், தியாகதுர்க்கம், சங்கராபுரம் துணை மின் நிலையங்களிலிருந்து மின் வினியோகம் செய்யப்படுகிறது. மேற்படி துணை மின் நிலையங்கள், நெய்வேலி அனல் மின் நிலையத்திலிருந்து நெய்வேலி-தேவியாக்குறிச்சி மின்னூட்டி I & II மற்றும் விழுப்புரம் துணை மின் நிலையம் மூலம் மின் சப்ளை பெறுகின்றன. கடந்த சில நாட்களாக, நெய்வேலி அனல் மின் நிலையத்தில் உள்ள சில மின்னாக்கிகள் (Generators) பழுதடைந்த தாலும், சில மின்னாக்கிகள் பராமரிப்புக்காக நிறுத்தப்பட்டதாலும் மேற்கூறிய பகுதிகளுக்கு தேவையான மின் பளுவை ஈடுகட்ட முடியாததாலும், சில நாட்களில் மேற்கண்ட இடங்களில் சில மணி நேரங்களுக்கு மின் பளு குறைப்பு செய்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது. நெய்வேலி அனல் மின் நிலையத்தில் உள்ள மின்னாக்கிகள் கூடிய விரைவில் செயல்படத் துவங்கியவுடன் இப்பகுதிகளில் ஏற்படும் மின் தடை தவிர்க்கப்பட்டு, மின்சாரம் சீராக வழங்கப்படும்.

* திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியிலுள்ள அனல் மின் நிலையத்தில் உள்ள ஜெனரேட்டர்கள் பழுதடைந்திருப்பதாலும், சில ஜெனரேட்டர்கள் பராமரிப்புக்காக நிறுத்தப்பட்டிருப்பதாலும், மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. நான் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுக்கும்போது, இரவில் மட்டும்தான் மின்சார விநியோகம் தடைப்பட்டிருந்தது. இப்போது பகலிலும் மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளது. மிக மோசமான நிலைமை உள்ளது. சங்கராபுரம், கள்ளக்குறிச்சி போன்ற பகுதிகளிலே மின் விநியோகம் தடைப்பட்டு, மிக மோசமான நிலைமை உள்ளது. எனவே, பழுதடைந்துள்ள ஜெனரேட்டர்களை பழுதுபார்த்தும், பராமரிப்புக்காக நிறுத்தப்பட்ட ஜெனரேட்டர்களை இயக்கியும், அந்தப் பகுதிகளுக்கு - சங்கராபுரம் மற்றும் கள்ளக்குறிச்சி பகுதிகளுக்கு - மின்சார விநியோகம் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் முதலிய -பகுதிகளுக்கு சின்னசேலம், தியாகதுர்க்கம், சங்கராபுரம் துணை மின்நிலையங்களிலிருந்து மின் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி துணை மின் நிலையங்களுக்கு நெய்வேலி அனல் மின் நிலையத்திலிருந்து மின்சாரம் சப்ளை செய்யப்

1995 ஏப்ரல் 24] [திரு. எஸ். கண்ணப்பன்]

படுகிறது. அங்கே சில யூனிட்டுகள் பழுதடைகின்றபோது சில நேரம் அந்த மின் உற்பத்தி நிறுத்தி வைக்கப்படுகின்றபோது இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றது. அது தவிர, பராமரிப்பிற்காக சில நேரங்களில் ஜெனரேட்டர்களை நாம் நிறுத்தி வைத்து பழுதுபார்க்கின்ற போதும் சில இடங்களிலே மின்சார தட்டுப்பாடு வருகின்றதே தவிர, இது ஒரு நிரந்தரமான பிரச்சினை அல்ல. நிரந்தரமான தட்டுப்பாடு அல்ல. மெஷினரிகளில் ஏற்படுகின்ற சிற்சில பிரச்சினைகளின் காரணமாக ஒரு ‘டைம் பீயிங் அரேஞ்ச்மெண்ட்’ என்றுதான் சொல்லவேண்டும். அந்த அளவிற்கு ஒரு குறிப்பிட்ட சில நேரங்களில்தான் இதுபோன்ற நிலை ஏற்படுகின்றது. அது தவிர, இப்போது சிங்கரேணியில் இன்றைக்கு வேலை நிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிற நேரங்களில், இராமகுண்டத்தில் மின் உற்பத்தி பாதிக்கப்படுகின்றபோது ‘சதர்ன் கிரிட்’ தென் மண்டல மின் கட்டமைப்பிலே நமக்கு மின்சாரம் வருவது குறைகின்றது. இதுபோன்று கல்பாக்கம் அணு மின் நிலையத்திலே ஒரு ஜெனரேட்டர் பராமரிப்பிற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட சில நேரங்களில் பிரச்சினைகள் வருகின்றபோதுதான் அப்படிப்பட்ட நேரங்களில் இம்மாதிரி தடைகள் ஏற்படுகின்றது என்பது தவிர வேறு ஒன்றுமில்லை. ஆகவே வேகமாக பழுதுபார்த்து பராமரிப்புகளை மேற்கொண்டு பணிகளை முடுக்கி விட வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நம்முடைய மின்சார வாரியத்தின் மூலமாக ஆணையிடப்பட்டிருக்கிறது. ஆகவே இவைகள் எல்லாம் குறுகிய காலத்தில் சரிசெய்யப்படும். இனிமேல் இந்தப் பிரச்சினை இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம், கள்ளக்குறிச்சி பகுதிகளுக்கு மின்சார விநியோகம் ஈரோடு கிரிட் மூலமாக வருவதாகக் கூறப்படுகிறது. அந்த ஈரோடு கிரிட்டினுடைய மின்சார ஸ்விச்சானது ஆந்திராவிலே இராமகுண்டம் grid-ன் கண்ட்ரோலில் இருக்கிறது. நான்கு மாநில கட்டமைப்பாக இருந்தாலும்கூட, ராமகுண்டத்திலே இருக்கின்ற கிரிட்டின் (grid) மெயின்டனென்ஸ் அண்டு ஆப்பரேஷன் பண்ணுகின்ற அந்த 4 மாநில அதிகாரிகள் அங்கே இருக்கிறார்களா? ஆந்திர மாநிலம் தேவையான மின்சாரத்தை சர்ப்ளசாக எடுத்துக்கொண்டு, மீதியை தமிழகத்திற்கு கொடுக்கின்றார்கள். எனவே நான்கு மாநில கட்டமைப்பு அதிகாரிகள் மெயின்டனென்ஸ் அண்டு ஆப்பரேஷன் இயக்கத்தில் இராமகுண்டத்தில் இருக்கிறார்களா? அவர்கள் இந்த ஈரோடு கிரிட் செய்கின்ற மின்சார சப்ளையை செவ்வனே செய்ய முயற்சிகளைச் செய்கிறார்களா என அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கவன ஈர்ப்பிற்கு அப்பால் போய்க் கொண்டிருக்கிறார். அவர் கவனத்தை ஈர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளை விட்டுவிட்டு, பொதுவாக பல பிரச்சினைகளை கேட்டுக் கொண்டிருக்கிறார். இது சம்பந்தமாக தென் மண்டல கட்டமைப்பிலே ஏற்படுகின்ற பிரச்சினைகள் குறித்து, இந்த மன்றத்திலே நான் தெளிவாக பதிலுரை வைத்திருக்கிறேன். நான்கு மாநிலங்களின் மின்சாரத்தை பகிர்மானம் செய்கின்றபோது ஆந்திர மாநிலத்தில் என்னென்ன பிரச்சினைகள் ஏற்பட்டது, அதற்குப் பிறகு நம்முடைய அரசின் சார்பிலே மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று உத்தரவிட்டார்கள் என்றெல்லாம் விளக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது அந்த நிலையெல்லாம் சரியாகப் போயிருக்கிறது. சில நேரங்களில் இப்படித்தான் நான்கு மாநிலங்கள் என்று வருகின்றபோது அவர்களுக்கு அதிகமான தட்டுப்பாடு இருக்கிறது. அதனாலே பிரச்சினை ஏற்படுகிறது. அதிகமான மின்சாரத்தை எடுக்கின்றபோது நம்முடைய 'ப்ரீகுவன்சி' குறைந்து நம்முடைய மெஷினரிகள் எல்லாம் செயலிழந்து போகின்றன. ஆகவே இதுசம்பந்தமாக அதிகாரிகளிடத்திலே பேசி 4 மாநில அதிகாரிகள் இருந்து பேசுகிறார்கள். 4 மாநிலத்திலும் அதிகாரிகள் இல்லாவிட்டால் எப்படி செயல்பாடு நடக்கும்? இது கேள்வியே அல்ல. ஆகவே இதுபோன்ற கேள்விகளைக் கேட்பது எந்தவிதத்தில் சரி என்று நான் கேட்கிறேன். ஆகவே அதிகாரிகள் இருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவாகவே சரியில்லை தான். கள்ளக்குறிச்சி மின் விநியோகத்தில் தடை ஏற்படுவது பற்றி உறுப்பினர் கேள்வி கேட்டுவிட்டு 4 மாநிலத்திற்கும் போனார் என்றால் என்ன அர்த்தம்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அதிகாரிகள் இருக்கின்ற காரணத்தினாலே தான் யார் யார் எவ்வளவு எடுக்கிறார்கள், எப்படி மின்சாரம் அதிகமாக எடுக்கப்படுகிறது என்றெல்லாம் கணக்கிடப்படுகிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்தந்த மாநிலத்திற்கு உரிய அதிகாரிகள் இருந்துதான் செயல்படுத்துகிறார்கள். ஆகவே அதைக் கொடுக்கின்ற பொறுப்பு, சதர்ன் கிரிட்டிலே அதற்கென்று பொறுப்பான அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய கன்ட்ரோலில் அது இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு மாநில அரசும் அதைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே இதுபோன்ற நிலைகள் தான் இன்று செயல்பாட்டில் இருக்கிறது. அப்படி பிரச்சினை வரும்போது இந்த

1995 ஏப்ரல் 24] [திரு. எஸ். கண்ணப்பன்]

மெயின்டனென்ஸ் பிரச்சினை வரும்போது சில நேரங்களில் இப்படித்தான் ஏற்படும். மெஷினரிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. எந்த நேரத்தில் நிற்கும் என்று சொல்ல முடியாது. திடீரென்று ஒருபழுது ஏற்பட்டுவிட்டால் நின்றுவிடுகிறது. ஆகவே இதை நாம் உடனடியாக பழுதுபார்க்கிறோம். ஆகவே அப்படிப்பட்ட சிற்சில இடர்பாடுகள் வருகின்றபோது - இது நிரந்தரமாக இருந்தால்தான் பிரச்சினை - அது களையப்பட்டு இப்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல் அப்பகுதியில் மின்சார விநியோகம் ஒழுங்காக இருக்கும். ஏதாவது குறைகள் இருந்தால் அமைச்சரிடத்திலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் கோரிக்கைகளாக எழுதித் தரலாம். நான் அதைப் பரிசீலிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல், 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர்.

முற்பகல் 11-20

***மாண்புமிகு டாக்டர் இரா . நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் "

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.